# முதல் பாட புத்தகம்

(இரண்டாம் வகுப்பு)

மேரி யரசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய

**கா. நமச்சிவாய முதலியார்**

எழுதியது

OFFICE OF THE REGISTRAR OF ...
17 DEC 1924
MADRAS

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
...ரசாமி நாயுடு ஸன்ஸ்
1924

[விலை 3 அணா

TB
031,6(
N24

494.8 II 86
1475

Printed at
the 'Caxton Press',
Madras.

# குறிப்பு

இப் பதிப்பில் சில புதுப் பாடங்களும் செய்யுட்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

2. பாடங்களில் ஆங்காங்கே நீதி வாக்கியங்களும் பழமொழிகளும் கட்டுரைச் சொற்களும் மரபுச் சொற்களும் ஏற்ற இடங்களில் அமைக்கப்பட் டுள்ளன.

3. கடின சந்திகள் ஒருவாறு நீக்கப்பட்டிருப்பினும், வகுப்பை நோக்குமிடத்து, அவ்வாறு நீக்கப்பட்டமை சாலப் பொருத்தமுடையதென்பது நன்கு புலனாகும்.

4. செய்யுட் பாடங்கள் முற்றும் நீதி வாக்கியங்களாகவே இருப்பின் மாணாக்கர்களுக்கு மனவெறுப்பு உண்டாகுமாதலால், சில பொருட் பாடங்கள் எளிய செய்யுள் நடையில் அமைக்கப்பட் டுள்ளன.

கா. நம.

181992.



நமது இந்தியாவின் சக்கரவர்த்தியாகிய

# ஐந்தாம் - ஜார்ஜ் மகிபர்

## வாழ்த்துப் பாட்டு

(1)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே

(2)

ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே
ராஜ நீதி மாறி டாத தேஜன் வாழ்கவே

(3)

இன்ப மேவ நம்மை ஆளும் இறைவன் வாழ்கவே
அன்பி னோடு கல்வி நல்கும் அரையன் வாழ்கவே

(4)

மட்டி லாத மேரி யரசி மகிழ்நன் வாழ்கவே
சிஷ்ட ருக்கே இஷ்ட ஞன சீலன் வாழ்கவே

(5)

நிறையும் உலகம் எங்குஞ் செங்கோல் நின்று வாழ்கவே
இறைவ னருளால் ஜார்ஜு மன்னன் என்றும் வாழ்கவே

(6)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே

# பொருள் அடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1-18 | எளிய பாடங்கள் | 7-24 |
| 19 | பாட்டு | 25 |
| 1. | நாய் | 26 |
| 2. | கிராம ஏற்பாடு | 28 |
| 3. | பூனை | 30 |
| 4. | காக்கையும், நரியும் | 32 |
| 5. | வாழை மரம் | 34 |
| 6. | குருவிகள் | 37 |
| 7. | பெட்டைக் கோழி | 38 |
| 8. | எலி | 40 |
| 9. | யார் பெரியவன் ? | 42 |
| 10. | நல்ல பையன் | 44 |
| 11. | தும்பியும், பையனும் | 46 |
| 12. | மரம் | 48 |
| 13. | எறும்பு | 50 |
| 14. | தபால்காரன் | 52 |
| 15. | முனியனும், இராமனும் | 54 |
| 16. | அவரைக் கொட்டை | 56 |
| 17. | உருவங்கள் | 58 |
| 18. | எறும்பு | 60 |
| 19. | வாழை மரம் | 61 |
| 20. | உலக நீதி | 63 |

# முதல் பாட புத்தகம்





1. இவர் நமது ராஜா.
2. இவர் பெயர் ஜார்ஜ் மகாராஜா.
3. இவர் மிகவும் நல்லவர்.
4. இவர் நம்மைக் காக்கிறார்.
5. இவரைக் கடவுள் காப்பாராக.



2.] இரண்டாம் பாடம் [உ.

1. இது ஒரு நல்ல பசு.
2. பசு சுத்தமான பிராணி.
3. பசு புல்லை மேயும்; தண்ணீரைக் குடிக்கும்.
4. பசு அதிக உபயோகமுள்ள ஜந்து.
5. பசு நமக்கு நல்ல பால் தரும்.
6. பசுவின் பால் இனிப்பாக இருக்கும்.
7. பால் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது.
8. பாலினால் தயிரும், மோரும் செய்யலாம்.
9. மோரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம்.
10. வெண்ணெயைக் காய்ச்சினால் நெய் ஆகும்.
11. பசு கன்று போடும்; கன்று மிகவும் அழகானது.
12. ஆண் கன்றுக்குச் சேங்கன்று என்று பெயர்.
13. பெண் கன்றுக்குக் கிடாரி என்று பெயர்.



3.] மூன்றாம் பாடம் [ங.

1. கண்-ணன் தின்-னும் பண்-டம் என்ன ?
கண்ணன் தின்னும் பண்டம் வெண்-ணெய்.

2. அண்-ணன் எழு-தின கடி-தம் எங்கே ?
அண்ணன் எழுதின கடிதம் இது-தான்.

3. இரா-மன் வீட்-டில் என்ன செய்-தான் ?
இராமன் வீட்டில் வேலை-கள் செய்-தான் ?

4. கந்-தன் வந்-தது எந்-தக் கிழமை ?
கந்தன் வந்தது வெள்-ளிக் கிழமை.

5. உங்கள் நாற்-காலி யார் செய்-தது ?
எங்கள் நாற்காலி தச்-சன் செய்தது.

6. முரு-கன் வேலை-கள் எப்-போது முடி-யும் ?
முருகன் வேலைகள் நாளை-க்கு முடியும்.



4.] நான்காம் பாடம் [ச.

1. கன்றுக் குட்டி துள்ளி ஓடும்.
2. ஒன்று ஆனாலும் நன்றாகச் செய்.
3. என்றும் கடவுளை நம்பி இரு.
4. பெற்றோர் சொல்லைக் கேட்டு நட.
5. கற்றோர் சொல்வதைக் கவனமாய்க் கேள்
6. காற்று உள்ளபோதே தூற்ற வேண்டும்.
7. கல்வி ஒன்றே அழியாச் செல்வம்.
8. நல்லோர் சொல்லை நம்பி நட.
9. கல்லைக் குத்தினால் கைதான் நோவும்.
10. வெள்ளிக் கிண்ணம் விலை அதிகம்.
11. கள்ளன் பின்னே குள்ளன் போனான்.
12. பள்ளம் இருந்தால் தண்ணீர் தங்கும்.

5.] ## ஐந்தாம் பாடம் [ரு.



இது ஒரு மீன்.
மீன் நீரில் வசிக்கும்.
மீனுக்குக் கையும் இல்லை,
காலும் இல்லை.
மீன் சிறகினால் நீந்துகிறது.



தவளை நீரிலும் வசிக்கும்,
நிலத்திலும் வசிக்கும்.
தவளைக்குக் கால் நான்கு.
தவளை தண்ணீரில் நீந்தும்,
தரையில் தத்தும்.



இது ஒரு பாம்பு.
பாம்புக்கு உடல் நீளம்.
பாம்புக்குக் கால் இல்லை.
பாம்பு மார்பினால் ஊர்ந்து
செல்லும்.



காக்கை ஒரு விதப் பறவை.
பறவைக்கு இறக்கையும்
காலும் இருக்கின்றன.
பறவை ஆகாயத்தில் பறக்-
கும், பூமியில் நடக்கும்.



இது ஒரு குதிரை.
குதிரை ஒருவகை மிருகம்.
குதிரைக்குக் காலும் உண்டு,
வாலும் உண்டு.
மிருகம் பூமியில் வசிக்கும்.



6.] ஆரும் பாடம் [சா

1. கோழி கூவு-கிறது.
2. குயில் கூவு-கிறது.
3. காக்கை கரை-கிறது.
4. மயில் அகவு-கிறது.
5. நாய் குரைக்-கிறது.
6. பூனே சீறு-கிறது.
7. குதிரை கனேக்-கிறது.
8. ஆடு கத்து-கிறது.
9. கழுதை கத்து-கிறது.
10. தவளே கத்து-கிறது.
11. பன்றி உறுமு-கிறது.
12. யானே பிளிறு-கிறது.
13. புலி உறுமு-கிறது.
14. சிங்கம் கர்ஜிக்-கிறது.
15. நாம் பேசு-கிருேம்.



7.] ஏழாம் பாடம் [எ.

1. கால் இல்-லா-தவன் நொண்டி.
2. கண் இல்லாதவன் குருடன்.
3. கை இல்லாதவன் முடவன்.
4. காது இல்லாதவன் செவிடன்.
5. வாய் இல்லாதவன் ஊமை.
6. மூக்கு இல்லாதவன் மூக்கறையன்.
7. தலை இல்லாதது முண்டம்.
8. மயிர் இல்லாதவன் மொட்டை.
9. படிப்பு இல்லாதவன் மூடன்.
10. பணம் இல்லாதவன் ஏழை.
11. மெய் இல்லாதவன் பொய்யன்.
12. அழிவு இல்லாதவர் கடவுள்.

## 8.] எட்டாம் பாடம் [அ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஸ | ஷ | க்ஷ | ஹ |
| ஜா | ஸா | ஷா | க்ஷா | ஹா |
| ஜி | ஸி | ஷி | க்ஷி | ஹி |
| ஜீ | ஸீ | ஷீ | க்ஷீ | ஹீ |
| ஜு | ஸு | ஷு | க்ஷு | ஹு |
| ஜூ | ஸூ | ஷூ | க்ஷூ | ஹூ |
| ஜெ | ஸெ | ஷெ | க்ஷெ | ஹெ |
| ஜே | ஸே | ஷே | க்ஷே | ஹே |
| ஜை | ஸை | ஷை | க்ஷை | ஹை |
| ஜொ | ஸொ | ஷொ | க்ஷொ | ஹொ |
| ஜோ | ஸோ | ஷோ | க்ஷோ | ஹோ |
| ஜௌ | ஸௌ | ஷௌ | க்ஷௌ | ஹௌ |
| ஜ் | ஸ் | ஷ் | க்ஷ் | ஹ் |

| | | | |
|---|---|---|---|
| ஜனம் | ராஜா | விஷம் | பக்ஷம் |
| ஜாதி | மேஜை | வேஷ்டி | பக்ஷி |
| ஜீவன் | மாஸம் | பாஷை | பரீக்ஷை |
| ஜோடு | ஸாக்ஷி | இஷ்டம் | தேஹம் |



9.] ஒன்பதாம் பாடம் [கூ.

1. ரோஜா புஷ்பம் வெகு அழகு.
2. ஐயா, இது ஒரு புது மேஜை.
3. அங்கே ஜனக் கூட்டம் அதிகம்.
4. பாம்பின் பல்லில் விஷம் உண்டு.
5. ராஜா இங்கே என்று வருவார் ?
6. ஹா ஹா ! இது பக்ஷமுள்ள நாய்.
7. நீ இதற்கு ஸாக்ஷியாய் இரு.
8. உனக்கு யார்மேல் அதிக பக்ஷம் ?
9. ஒரு கௌஜம் துணி வாங்கு.
10. நீ எப்போதும் நிஜமே பேசு.
11. நாம் படிப்பது தமிழ்ப் பாஷை.
12. உன் அண்ணன் ஊரில் க்ஷேமமா ?

10.] பத்தாம் பாடம் [கo.



புல் பூமியில் முளைத்திருக்கிறது.

புல் தரையின்மேல் படர்ந்து வளரும்.



செடி அடியில் கொத்தாகக் கிளைத்து இருக்கிறது.

செடிகள் அதிக உயரமாக வளருவதில்லை.



கொடி கயிறுபோல் நீண்டு படரும்.

சில கொடிகள் தரைமேல் படர்ந்து செல்லும்.

சில கொடிகள் கொம்பைப் பற்றிக்கொண்டு ஏறும்.

சில வலப் புறமாகவும், சில இடப்புறமாகவும் சுற்றும்.



இந்த மரத்தைப் பார்.

இதற்கு அடிமரம் பருத்து இருக்கிறது.

அடிமரத்தின் மேலே அதன் கிளைகள் பிரிகின்றன.

சில மரங்களுக்குக் கிளைகள் உண்டு.
சில மரங்களுக்குக் கிளைகள் இல்லை.

புல், செடி, கொடி, மரம் ஆகிய இவைகளுக்குத் தாவரம் என்று பெயர்.




## 11.] பதினொன்றாம் பாடம் [கக.

1. காலையில் சூரியன் தோன்றுகிறது.
2. மாலையில் சூரியன் மறைகிறது.
3. மத்தியானத்தில் சூரியன் உச்சியில் இருக்-கிறது.
4. சூரியன் தோன்றும் பக்கம் கிழக்கு.
5. சூரியன் மறையும் பக்கம் மேற்கு.
6. கிழக்கே பார்த்து நின்றால், நமது இடப் பக்கம் வடக்கு.
7. கிழக்கே பார்த்து நின்றால், நமது வலப் பக்கம் தெற்கு.
8. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனத் திசைகள் நான்கு.



12.] பன்னிரண்டாம் பாடம் [கஉ.

1. காக்கை கருமை நிறமானது.
2. பால் வெள்ளை நிறமானது.
3. புல் பச்சை நிறமானது.
4. இரத்தம் சிவப்பு நிறமானது.
5. பொன் மஞ்சள் நிறமானது.

சுண்ணும்பு வெள்ளை நிறம்.
பாக்கு கருமை நிறம்.
வெற்றிலை பச்சை நிறம்.

இந்த மூன்று பொருள்களையும் சேர்த்து மென்றால், அவை சிவப்பு நிறமாக மாறும்.



13.] பதின்மூன்ரும் பாடம் [கரு

1. நான் சட்டம் எழுது-கிறேன்.
2. நாம் பாடம் படிக்-கிரும்.
3. நாங்கள் கணக்குப் போடு-கிரும்.

4. நீ வேலை செய்-கிருய்.
5. நீர் கடிதம் எழுது-கிறீர்.
6. நீங்கள் வீட்டுக்குப் போ-கிறீர்-கள்.

7. அவன் மரத்தை வெட்டு-கிருன்.
8. அவள் கோலம் போடு-கிருள்.
9. அவர் இங்கே வரு-கிருர்.
10. அவர்கள் கிணறு தோண்டு-கிருர்-கள்.

11. அது வீட்டில் இருக்-கிறது.
12. அவை நன்ருய் ஓடு-கின்-றன.
13. அவைகள் காட்டில் திரி-கின்-றன.



**14.**] பதினான்காம் பாடம் [கச

1. சூரியன் பகலில் வெளிச்சம் கொடுக்கிறான்.
2. சந்திரன் இரவில் வெளிச்சம் கொடுக்கிறான்.
3. ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.
4. ஏழு நாள் சேர்ந்தது ஒரு வாரம்.
5. வாரத்தின் நாள்களுக்கு — ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என்று பெயர்.
6. முப்பது நாள்கள் சேர்ந்தது ஒரு மாதம்.
7. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என மாதங்கள் பன்னிரண்டு.
8. பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு வருஷம்.

15.] பதினைந்தாம் பாடம் [கரு.

1. அதி காலையில் நீ படுக்கையை விட்டு எழுந்திரு.

2. உடனே சுவாமியை நினைத்துக் கும்பிடு.

3. பின்பு, பல் விளக்கி, முகம் கழுவி, கை கால்களைச் சுத்தம் செய்துகொள்.

4. ஓர் இடத்தில் உட்காந்து உன்னுடைய பாடங்களைப் படி.

5. படிக்கும்போது அதே கவனமாகப் படி.

6. உபாத்தியாயர் உனக்குக் கொடுத்த வீட்டு வேலையைச் செவ்வையாகச் செய்.

7. பள்ளிக்கூடம் போக வேளை ஆவதற்கு முன்னே உடம்பு குளித்து, தேகத்தைச் சுத்தம் செய்துகொள்.

8. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

9. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.

10. உனக்கு இட்ட உணவைச் சாப்பிடு.

11. வீட்டில் இல்லாத பொருள் வேண்டும் என்று தொந்தரவு செய்யாதே.

12. சரியான வேளைக்குப் பள்ளிக்கூடம் போகப் புறப்படு.

## 16.] பதினாறும் பாடம் [கசு

1. தாயார், தகப்பனார், அண்ணன், அக்கை. உபாத்தியாயர் முதலிய இவர்கள் எல்லோரும் நமக்குப் பெரியோர்கள்.

2. பெரியோரைப் பார்த்தால், நீ உடனே எழுந்து மரியாதை செய்.

3. பெரியோர் முன்னே உட்காந்துகொண்டு இராதே.

4. அவர்கள் உன்னை உட்காரச் சொன்னால். அமரிக்கையாக உட்காரு.

5. பெரியோர் சொல்லுக்கு மறுத்துச் சொல்லாதே.

6. பெரியோர் சொல்லைக் கவனமாய்க் கேட்டு. அதன்படி நட.

7. பெரியோரை, 'நீ' என்று சொல்லாதே; 'நீங்கள்' என்று சொல்.

8. எதைச் செய்தாலும் பெரியோரைக் கேட்டுச் செய்.

9. பெரியோர் உத்தரவு இல்லாமல் வெளியில் போகாதே.

10. பெரியோர் மனம் வருத்தப்படும்படி ஒருபோதும் நடவாதே.



**17.**] பதினேழாம் பாடம் [கஎ.

1. ஆடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.
2. மனிதர் கூட்டம் கூட்டமாய் நிற்கிறார்கள்.
3. எறும்பு சாரை சாரையாய்ப் போகின்றது.
4. துவரை குவியல் குவியலாய் இருக்கிறது.
5. மரங்களைச் சாலை சாலையாய் வளர்க்கிறான்.
6. புஷ்பம் கொத்துக் கொத்தாய் மலர்கிறது.
7. காய்கள் குலை குலையாய்க் காய்க்கின்றன.
8. செடிகளை வரிசை வரிசையாய் நடுகிறார்கள்.
9. வைக்கோலைப் போர் போராய்ப் போடுகிறான்.
10. புல்லைச் சுமை சுமையாய்க் கட்டுகிறான்.
11. நெற்கதிரை அரி அரியாய் வைக்கிறாள்.



18.] பதினேட்டாம் பாடம் [கஅ

1. கண்களால் பார்க்கிறோம்.
2. மூக்கினால் வாசனை அறிகிறோம்.
3. வாயினால் பேசுகிறோம்; சாப்பிடுகிறோம்.
4. நாக்கினால் ருசி பார்க்கிறோம்.
5. பல்லினால் மெல்லுகிறோம்.
6. காதுகளால் கேட்கிறோம்.
7. கைகளால் வேலை செய்கிறோம்.
8. விரல்களால் பிடிக்கிறோம்.
9. கால்களால் நடக்கிறோம்.
10. மனத்தால் நினைக்கிறோம்.



**19.**] பத்தோன்பதாம் பாடம் [கக.

(1)

அம்மா இங்கே வாரும் - ஆச்ச ரியம் பாரும்
சும்மா சொல்லு வேனே - துஷ்டப் பையல் நானே

(2)

என்னைப் போலோர் பிள்ளை - இருக்கி ருனே உள்ளே
என் உருவம் எல்லாம் - இவனுக் கேது சொல்லும்

(3)

நான்என் கையை எடுத்தேன் - தானும் கையை எடுத்தான்
நான் அசைந்து நடந்தேன் - தானும் உடன் நடந்தான்

(4)

நான் சுவடி எடுத்தேன் - தானும் அதை எடுத்தான்
நான் அப்புறம் போனேன் - தான் எங்கேயோ காணேன்.



1.] முதல் பாடம் [க.

# நாய்

1. இந்தப் படத்தைப் பார். இது ஒரு குச்சு நாய். குச்சு நாய் வெகு அழகாய் இருக்கிறது. இந்தக் குச்சு நாயின் உடல் முழுதும் மயிர் அடர்ந்து நீண்டு தொங்குகிறது. நாய்கள் வெண்மை, கருமை, செம்மை முதலிய பலவகை நிறம் உள்ளனவாய் இருக்கும்.

2. நாய்க்குத் தலை பெரியது; வால் நீண்டு வளைந்து இருக்கும். இந்த நாய்க்குக் காது மடிந்து படிந்து இருக்கிறது. சில நாய்களுக்குக் காதுகள் நீண்டும் இருக்கும். நாய்க்கு எத்தனை கால்கள் இருக்கின்றன? பார்; நான்கு கால்கள் இருக்கின்றன. முன் கால்கள் இரண்டு, பின் கால்கள்

இரண்டு. முன் காலில் ஐந்து விரல்களும், பின் காலில் நான்கு விரல்களும் இருக்கின்றன. சில நாய்களுக்குப் பின் காலிலும் ஐந்து விரல்கள் இருப்பதுண்டு. விரல்களின் நுனியில் கூர்மை-யான நகங்கள் இருக்கின்றன.

3. நாய் நல்ல குணம் உள்ளது. அது தன்னை வளர்க்கும் எஜமானன் இடத்தில் அதிக பக்ஷமாய் இருக்கும். எஜமானன் வீட்டில் அன்னியர் நுழை-யாதபடி காக்கும். அங்கு யாராவது வந்தால், அது உடனே குரைக்கும். நாய்க்குச் சந்தோஷம் உண்-டானால் தன் வாலை ஆட்டும்; கோபம் உண்டானால், பல்லைக் காட்டி உறுமும்.

4. நாய் ஓடும்போது நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டே ஓடும். ஒரு நாய், வேறு ஒரு புதிய நாயைக் கண்டால், குரைத்து, அதனோடு சண்டை யிடும். நாய் குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

5. நாய், சோறு கறி மீன் முதலிய எந்தப் பொருளையும் தின்னும். அது தண்ணீரைத் தன் நாக்கினால் நக்கிக் குடிக்கும். அதற்கு எலும்பைக் கடிப்பதில் ஆசை அதிகம்.

6. நாம் நாயைப் பக்ஷமாய் வளர்த்தால், அது நமக்கு உண்மையாய் வேலை செய்யும். பழக்கினால், அது தன் வாயில் விளக்கைப் பிடித்துக்கொண்டு இராத்திரியில் நமக்கு முன்னே நடந்து சென்று வழி காட்டும். நாயை அடிக்காதே; அதனிடத்தில் பக்ஷமாய் இரு. அது உன்னைக் கடிக்காது.



2.] இரண்டாம் பாடம் [உ.

# கிராம ஏற்பாடு

**முத்து** — அண்ணு, இவர் யார் ?

**தகப்பனர்** — இவர்தான் கிராம முனிசீப்பு.

**முத்து** — அவருக்கு இடப்பக்கத்தில் இரண்டு பேர் இருக்கிருர்களே அவர்கள் யார் ?

**தகப்பனர்** — ஒருவர் கணக்கப்பிள்ளை ; மற்றவர் மணியக்காரர்.

**முத்து** — கணக்கப்பிள்ளைக்கு என்ன வேலை ?

**தகப்பனுர்** — நாம் பயிரிடும் நிலங்களை அவர் அளந்து பார்ப்பார். நாம் என்ன பயிரிடுகிருேம் என்பதைப் பார்த்து எழுதி வைப்பார். கிராமத்தில் பிறந்தவர்களையும் இறந்தவர்களையும் பதிவு செய்து வைப்பர். இன்னும் கிராம முனிசீப்பு சொல்லும் காரியங்களை எல்லாம் செய்வார்.

**முத்து** — சரிதான், மணியக்காரர் செய்யும் வேலை என்ன?

**தகப்பனுர்** — நாம் நமது நிலங்களுக்காகக் கட்டும் வரிப்பணத்தை வசூல்செய்து, முனிசீப்பிடம் கொடுப்பார். வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில் குடியானவர்களுக்கு ஏதாவது சச்சரவு உண்டானல் அவர் அதைத் தீர்த்து விடுவார்.

**முத்து** — முனிசீப்பு செய்யவேண்டிய வேலை ஒன்றும் இல்லையோ?

**தகப்பனுர்** — அவருக்குத்தான் அதிக வேலை. யாராவது குற்றம் செய்தால் அதை அவர் விசாரிக்க வேண்டும். கொடுக்கல், வாங்கல் முதலிய காரியங்களில் சச்சரவு நேர்ந்தால், அதையும் விசாரித்துத் தீர்ப்புச் செய்யவேண்டும்.

**முத்து** — சரிதான், அதோ கையில் தடியை வைத்துக்கொண்டு நிற்கிருனே, அவன் யார்?

**தகப்பனுர்** — அவன் தலையாரி.

**முத்து** — அவன் என்ன வேலை செய்வான்?

**தகப்பனுர்** — கணக்கப் பிள்ளை நிலத்தை அளக்கும்போது, இவன் கூட இருந்து, சங்கிலி பிடிப்பான். நிலத்துக்குத் தண்ணீர் பங்கிட்டு விடு-

வான்; மணியக்காரர் வரி வசூல் செய்யும்போது கூடப் போவான். கிராமமுனிசீப்பு சொல்லின்படி, கிராமத்துக்குப் பொதுவான விஷயங்களைத் தண்டோரா போட்டு ஊராருக்குத் தெரிவிப்பான். இராத்திரி காலத்தில் ஊரைச் சுற்றிக் காவல் காப்பான்.

முத்து — ஓஹோ, அதுதான் இராத்திரியில் தமுக்குச் சத்தம் கேட்கிறதோ! இதுவரையில் இதெல்லாம் எனக்குத் தெரியாமலே இருந்தது, இப்போது தெரிந்தது, அண்ணு.

3.] மூன்றும் பாடம் [ரூ.

# பூனை

1. இந்தப் பூனையைப் பாருங்கள்; இது படுத்துக்கொண்டு இருக்கிறது. இதைச் சுற்றி ஐந்து குட்டிகள் இருக்கின்றன. பூனைக்குத் தலை குண்டானது; காது வட்டமானது. அதன் உடம்பு முழுதும் மெல்லிய மயிர் அடர்ந்து இருக்கிறது.

2. பூனையின் கருவிழி பகலில் ஒடுங்கி நீண்டு இருக்கும்; இரவில் வட்டமாக இருக்கும். பூனைக்கு இரவில்தான் நன்றாய்க் கண் தெரியும். பூனையின் நாக்கு சொரசொரப்பாய் இருக்கும்; அதன் பற்கள் மிகவும் கூர்மையானவை.

3. பூனைக்கு மேல்-உதட்டில் நீளமான மீசை மயிர் உண்டு, பூனைக்கு நான்கு கால்களும் ஒரு வாலும் இருக்கின்றன. பூனையின் பாதம் வட்டமாயும் மிருதுவாயும் இருக்கும். ஒவ்வொரு பாதத்-

திலும் ஐந்து ஐந்து நகங்கள் உண்டு. பூனை தன் நகங்களை இஷ்டமானபோது வெளியே நீட்டும்; மற்ற வேளையில் அவைகளை உள்ளே சுருக்கிக்-கொள்ளும். இப்படிச் செய்ய நம்மால் முடியாது.

4. பூனை நன்றாய் வாசனை பிடிக்கும். கொஞ்-சம் நெய்யைப் பூனையின் முகத்தில் தடவி விட்-டால், அது அதை நகத்தால் பிறாண்டிப் பிறாண்டி நக்கும். முகம் புண் ணானாலும் விடாமல், வாசனை



போகுமட்டும் பிறாண்டும். பூனைக்குச் சந்தோஷம் உண்டானால் 'கொர் - கொர்' என்று சத்தம் இடும். பூனை மரத்தின்மேல் ஏறும்.

5. பூனை, சோறு பால் மீன் மாமிசம் முதலிய பொருள்களைத் தின்னும். பூனைக்கு எலியைப் பிடித்துத் தின்ன அதிக இஷ்டம். பூனை எலி-யைப் பிடிக்கப் போகும்போது சந்தடி செய்யாமல் நடந்து போகும். எலிகளைக் கொல்வதற்கே நாம் பூனையை வீட்டில் வளர்க்கிறோம்.



4.] நான்காம் பாடம் [ச.

# காக்கையும், நரியும்

1. ஒரு செட்டி கடைத்தெருவில் முறுக்கும் வடையும் விற்றுக்கொண்டு இருந்தான். ஒரு காக்கை, அவன் ஏமாறி இருக்கும் சமயம் பார்த்து ஒரு வடையைத் திருடிக்கொண்டு பறந்துபோயிற்று.

2. காக்கை, அந்த வடையைத் தன் வாயினுல் கௌவிக்கொண்டு, ஒரு மரத்தின்மேல் உட்காந்து-கொண்டு இருந்தது. அதை ஒரு நரி பார்த்தது. அது அந்த வடையை அபகரித்துக் கொள்ள நினைத்தது. பிறகு, அது அந்தக் காக்கையைப் பார்த்துச் சொல்லுகிறது :

3. 'என் அருமைச் சிநேகிதனே, ஆஹா, நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்! நீ கறுப்பாய் இருக்கிறாய் என்று உன்னை எல்லோரும் பரிகாசம் செய்கிறார்களே, அவர்கள் உன்னுடைய அழகைச் சரியாய்ப் பார்க்கவில்லையோ!

4. 'ஆஹா, உன் உருவமே இவ்வளவு அழகாய் இருக்கிறதே, இன்னும் உன் குரலின் ஓசை எப்படி இருக்குமோ! அதைக் கேட்க எனக்கு அதிக ஆவல் உண்டாகிறது.

5. 'ஆகையால், காக்கையாரே, தயவு செய்து உமது வாயைத் திறந்து, ஒரு பாட்டுப் பாட வேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டது.

6. அதைக் கேட்ட காகம் கர்வம் அடைந்து, தன் வாயைத் திறந்து, 'கா - கா, கா - கா' என்று பாட ஆரம்பித்தது.

7. உடனே, அதன் வாயில் இருந்த வடை கீழே விழுந்தது. விழுந்த வடையை அந்த நரி கௌவி எடுத்துக்கொண்டு சந்தோஷமாய் ஓடிவிட்டது. காக்கை வடையைப் பறி கொடுத்துவிட்டு ஏங்கியிருந்தது.

8. காக்கை செட்டியை மோசம் செய்து, வடையைத் திருடிக்கொண்டு வந்தது அல்லவா? இப்போது காக்கையை நரி மோசம் செய்தது.

9. நாம் ஒருவரை மோசம் செய்தால், நம்மை மற்றவர்கள் மோசம் செய்வார்கள். கெட்டவர்கள் நம்மை மோசம்செய்ய அன்புடன் பேசுவார்கள். ஆகையால், நாம் அவர்கள் சொல்லில் நம்பிக்கை வைக்கலாகாது.



5.] ஐந்தாம் பாடம் [ரு.

# வாழை மரம்

1. இந்த வாழை மரம் செழிப்பாய் வளர்ந்து இருக்கிறது. இந்த மரத்தின் அடியில் வாழைக் கன்றுகள் அடர்த்தியாக முளைத்து இருக்கின்றன.

2. வாழை இலை நீண்டு அகலமாய் இருக்கும் ; அதன் நடுவில் நரம்பு ஒன்று உண்டு. வாழை மரம் முழுதும் பட்டைகளே அடர்ந்து இருக்கின்றன. அந்தப் பட்டைகளை உரித்தால், அதன் நடுவில் தண்டு இருக்கும்.

3. வாழை மரம், வைத்த பத்தாம் மாதம் குலை தள்ளும். ஒரு மரம் ஒரு குலைதான் தள்ளும்; குலை தள்ளுவதற்கு முன், ஒரு சிறிய இலை விடும்; அதற்கு, 'கண்ணாடி இலை' என்று பெயர்.

4. குலையில், முன்னே பூவும், பின்னே காயும் இருப்பதைப் பார். காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்-கின்றன. ஒரு சீப்பில் சுமார் பத்துப் பதினைந்து காய்கள் இருக்கும்.

5. பூவின் மேலும் பட்டைகள் அடுக்கு அடுக்காய் இருக்கின்றன. அதற்குள் பூவும் சீப்புச் சீப்பாய் இருக்கும். காயின் மேலே உள்ள தோல் பச்சை நிறமானது. பழுத்தால், அது மஞ்சள் நிறமாக மாறும். வாழைக்காயைத் தின்றால் அது துவர்க்கும்; பழம் தித்திக்கும். பச்சைவாழையின் தோல் பச்சையாகவும், செவ்வாழையின் தோல் சிவப்பாகவும் இருக்கும்.

6. வாழை மரத்துக்கு விதை இல்லை; கிளை-யும் இல்லை. ஆழமாகப் பள்ளம் தோண்டி, அதில் வாழைக் கன்றை நட்டு வைத்தால், அது குருத்து விட்டு வளரும். வாழை மரத்துக்கு எப்போதும் தண்ணீர் வேண்டும்.

7. வாழைக் காய், பூ, தண்டு ஆகிய இவை-களை நாம் சமைத்துச் சாப்பிடலாம்; பழத்தைத் தின்னலாம்; இலையில் சாப்பிடலாம். வாழை நாரி-னால் புஷ்பம் கட்டுகிறார்கள். வாழை மரத்தைக் கலியாணப் பந்தலில் கட்டுகிறோம்.



6.] ஆறும் பாடம் [சா.

# குருவிகள்

1. ஆஹா, இந்தக் குருவிகளைப் பார்! இவை எவ்வளவு அழகாய் இருக்கின்றன! படத்தில் எத்தனை குருவிகள் இருக்கின்றன? நான்கு குருவிகள் இருக்கின்றன. இரண்டு வலப் புறமாகவும், இரண்டு இடப் புறமாகவும் திரும்பி இருக்கின்றன.

2. இந்தக் குருவிகளுக்குக் கால்கள் குட்டையானவை. ஆகையால், இவை குதித்துக் குதித்து நடக்கும். இவைகளுக்கு இறக்கைகள் இருப்பதனால் இவை நன்றாய்ப் பறக்கும்; பக்ஷிகள் பறக்கும்போது தம் கால்களை உடலோடு சேர்த்துக்கொள்ளும்.

3. இந்தக் குருவிகள் ஆணும் பெண்ணும் இணை பிரியாமல் இருக்கும். குருவிகள் நெல் முதலிய தானிய மணிகளைக் கொறித்துத் தின்னும். அவை, புழு பூச்சிகளையும் கொத்தித் தின்னும்.

4. கிளி, மைனா முதலிய சில பறவைகள், பேசக் கற்றுக் கொடுத்தால், மனிதரைப்போல் பேசும். சில பக்ஷிகள் நன்றாய்ப் பாடும். பக்ஷிகள் பாடுவதைக் கேட்க நமக்கு இஷ்டமாக இருக்கிறது. பறந்து திரியும் பக்ஷிகளைப் பிடித்து, கூட்டில் அடைத்து வைப்பது பாவமான காரியம். பக்ஷிகளைப் பிடித்து வருத்தக் கூடாது. சில பிள்ளைகள் சிறு பக்ஷிகளையும், ஈ, எறும்பு முதலிய ஜந்துக்களையும் பிடித்து வருத்துகிறார்கள். அப்படிச் செய்வது கொடுமையான காரியம்.

7.] ஏழாம் பாடம் [எ.

# பெட்டைக் கோழி

1. நான் யார் தெரியுமா? நான்தான் கோழிக் குஞ்சு. நான் பிறந்து இரண்டு வாரம் ஆகிறது. நான் முட்டையி லிருந்து வெளியே வந்தேன்.



நான் பிறந்த போது எனக்கு இறகு இல்லை. பிறகுதான் எனக்கு இறகு முளைத்தது.

2. நான் என் தாயோடு கூடவே இருந்தேன். என்னை யாராவது பிடிக்க வந்தால், என் தாயார் ஓடிப் போய், அவர்களைக் குத்துவாள். ஏதாவது தானியம், புழு, பூச்சி கிடைத்தால், அவள் தன் காலால் சீய்த்து எனக்குக் காட்டுவாள். நான் அதை என் அலகினுல் குத்தித் தின்பேன். புழு அகப்பட்டால் எனக்கு அதிக இஷ்டம்.



3. இரவில் நான் என் தாயண்டை இருப்பேன். என் தாய் என்னைத் தன் இறக்கைக்குள் அடக்கிக்கொண்டு தூங்குவாள். எனக்குக் கொஞ்சமும் குளிர் இராது; நன்ருய்த் தூங்குவேன். அதி காலை-

யில் என் தகப்பனர் எழுந்து கூவுவார். என் தாயும் நானும் உடனே எழுந்திருப்போம். மனிதர்கூட அப்போது எழுந்து வேலைக்குப் போவார்களாம்.

4. எங்களுக்குக் காலும் விரலும் உறுதியானவை. ஒவ்வொரு காலிலும் முன்னே மூன்று



விரல்களும், பின்னே ஒரு விரலும் இருக்கின்றன. பாதத்திற்கு மேலே ஒரு சிறு விரலும் உண்டு. அதற்கு முள் என்று பெயர். அந்த முள்ளினுல் என் தகப்பனர் நன்ருய்ச் சண்டை செய்வார்.

5. நாங்கள் இரையை மெல்லுவதில்லை; அப்படியே விழுங்கி விடுவோம். அகப்பட்ட இரை பெரிதாக இருந்தால், அதைச் சிறு துண்டுகளாகச் செய்து விழுங்குவோம். இரையோடு சிறு கல்லையாவது மணலையாவது விழுங்குவோம். அந்தக் கற்கள் இரைப்பையில் போய் இரையை அரைத்து, கரைத்துவிடும். அதனுல், நாங்கள் விழுங்கும் இரை நன்ருய் ஜீர்ணம் ஆகிறது.

6. மயில் மிகவும் அழகான பக்ஷி. அதுவும் எங்கள் இனத்தைச் சேர்ந்தது என்று எனது தாயார் எனக்குச் சொன்னுள்.



8.] எட்டாம் பாடம் [அ.

# எலி

1. எலிகள் வீட்டில் வசிக்கின்றன. அவை, வீட்டின் மேல் கூரையில் தங்கி வசிக்கும்; அல்லது பூமியில் வளை தோண்டிக்கொண்டு அதற்குள் குடியிருக்கும்.

2. எலிக்கு நான்கு கால்களும் ஒரு வாலும் இருப்பதைப் பார். கால்களில் கூரான நகங்கள் இருக்கின்றன. எலி தன் நகங்களால் பூமியில் வெகு விரைவாக வளை தோண்டும்.

3. எலிக்குப் பல் சிறியதாயும் கூர்மையாயும் இருக்கும். எலி தன் கூரான பல்லினுல் நெல் முதலிய தானிய மணிகளைக் கொறித்துத் தின்னும்.

4. எலியின் மேல்-உதட்டில் நீண்ட மீசை மயிர் உண்டு. பூனையைக் கண்டால் எலிகளுக்கு அதிக பயம். அதனுல், எலிகள் பகலில் வெளியே வருவதில்லை. ஆனுல், அவை இரவில் வெளியே வந்து, நெல், கேழ்வரகு, பருப்பு, மிளகாய் முதலிய பொருள்களைத் திருடித் தின்னும்.

5. பொருள்கள் அதிகமாகக் கிடைத்தால், எலி அவற்றைக் கொண்டுபோய், தன் வளையில் சேர்த்துக்கொள்ளும்; துணிகளையும், புஸ்தகங்களையும் துண்டு துண்டாகக் கடித்துவிடும். ஆகையால். எலியைக் கொல்லவே பூனையை வளர்க்கிறோம்.



6. இரவில் கூடுவைத்து எலிகளைப் பிடிப்பதும் உண்டு. படத்தில் எலிக்கூடு ஒன்று இருப்பதைப் பாருங்கள். எலியைப் பிடிப்பதற்கு இந்தக் கூட்டில் ஏதாவது தின்பண்டம் வைத்து, கதவைத் திறந்து வைப்பார்கள். அந்தத் தின்பண்டத்தைத் திருடுவதற்கு எலி கூட்டுக்குள் நுழையும். நுழைந்தவுடன், கூடு அசைந்து கதவு மூடிக்கொள்ளும். பிறகு, எலி வெளியே வர முடியாமல் தவிக்கும்.

7. பிறகு, மனிதர்கள் அதை அடித்துக் கொன்று விடுவார்கள். படத்தில் இருக்கும் கூட்டில் ஓர் எலி அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. மற்றோர் எலி வெளியில் இருந்து விசனப்படுகிறது.

8. பிள்ளைகளே, நீங்கள் திருடினால், இந்த எலியைப்போலத் துன்பப்படுவீர்கள். ஆகையால், நாம் திருட்டு வேலை ஒருபோதும் செய்யலாகாது.



9.] ஒன்பதாம் பாடம் [கூ.

# யார் பெரியவன்?

இதோ இந்தப் பெண்ணைப் பார். இந்தப் பெண் நாற்காலியில் உட்கார்ந்து, தன் விரல்களைப் பார்க்கிருள். அவள் ஏன் விரல்களைப் பார்க்கிருள்? கையில் உள்ள விரல்கள் சண்டை யிடுகின்றன. இந்தப் பெண் தன் விரல்களைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இப்படிச் சண்டை யிடுகிறீர்கள்?' என்று கேட்கிருள். அதற்கு ஒவ்வொரு விரலும் தானே பெரியவன் என்று சொல்லுகிறது.

1. சுண்டு விரல் — 'அம்மா, நீ சாமியைக் கும்பிடும்போது, நான் முன்னே நிற்கிறேன்; ஆகையால், நானே பெரியவன்' என்றது.

**2. மோதிர விரல்** — 'நான் விலை உயர்ந்த மோதிரம் போட்டுக் கொள்கிறேன். ஆகையால், நானே எல்லோரிலும் பெரியவன்' என்றது.

(பிறகு அவள் தன் நடு விரலைக் கேட்டாள்; அது, 'நீ எல்லாரையும் கேட்டுக்கொண்டு வா, நான் கடைசியில் சொல்லுகிறேன்' என்றது.)

3. **சுட்டு விரல்** — 'நான் உனக்குத் தெரியாத பொருள்களை இதோ ☛ என்று காட்டுகிறேன்; நீ கோபமாய்ப் பேசும்போது நானும் கோபங்கொண்டு உன்னோடு ஆடுகிறேன். ஆகையால், நானே பெரியவன்' என்றது.

4. **பெரிய விரல்** — 'நான் இல்லாவிட்டால் உன்னால் எதையும் எடுக்க முடியாது; பிடிக்கவும் முடியாது; எழுதவும் முடியாது. ஆகையினால், நானே பெரியவன்' என்றது.

5. **நடு விரல்** — 'நானோ அவர்களைப் போல் காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஐந்து விரல்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பார். யார் பெரியவன் என்பது தெரியும்' என்றது.

6. இவைகளை எல்லாம் கேட்டுக்கொண்ட அந்தப் பெண், தன் விரல்களைப் பார்த்து, 'உங்களில் ஒவ்வொருவனும் பெரியவன்தான்' என்றுசொல்லி, சமாதானம் செய்தாள்.

7. ஆகையால், பிள்ளைகளே, நீங்கள், 'நானே பெரியவன், நானே கெட்டிக்காரன்' என்று பேசி, சண்டையிடாமல் இருங்கள்.



10.] பத்தாம் பாடம் [க0.

# நல்ல பையன்

1. இந்தப் பையனைப் பார். இவன் மிகவும் நல்ல பையன். இவன் பெயர் முருகன். இவனை ஏன் நல்ல பையன் என்று நாம் சொல்லவேண்டும்? அதற்குக் காரணம் சொல்லுகிறேன், கேளுங்கள்:

2. இவன் நாள்தோறும் அதி காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பான்; கடவுளை நினைத்துத் தொழுவான். உடனே பல்லைத் துலக்கி, முகம் கை கால்களைக் கழுவி, சுத்தம் செய்துகொள்ளு-

வான். பிறகு, ஓர் இடத்தில் உட்கார்ந்து, தன் பாடங்களைப் படிப்பான்.

3. உபாத்தியாயர், வீட்டில் செய்து கொண்டு வரக் கொடுத்த பாடங்களைத் தவறாமல் எழுதுவான். பாடசாலைக்குப் போகும் வேளை ஆனதும் குளித்து விட்டு, வீட்டில் உள்ள உணவைச் சாப்பிடுவான். சுத்தமான உடையை உடுத்துக்கொள்ளுவான்.

4. முருகன், வேளை தப்பாமல், பாடசாலைக்குப் போவான். போகும் வழியில் கெட்ட பிள்ளைகளோடு சேரவே மாட்டான்; அவர்களோடு விளையாடவும் மாட்டான். வேடிக்கை பார்க்கும் வாடிக்கை அவனிடம் இல்லை.

5. முருகன் பள்ளிக்கூடம் போய்,தன் பாடங்களைச் செவ்வையாக ஒப்பிப்பான். வகுப்பில் தன் உபாத்தியாயர் சொல்வதைக் கவனத்தோடு கேட்டுக்கொள்வான். உபாத்தியாயர் விளையாட விடும்போது மாத்திரம் வெளியே விளையாடப் போவான்.

6. பள்ளிக்கூடம் விட்டதும், முருகன் நேரே வீட்டுக்கு வருவான். வந்ததும் கொஞ்ச நேரம் அமைதியாய் இருப்பான். பிறகு, கை கால்களைக் கழுவிக்கொண்டு, விளக்கண்டை உட்கார்ந்து தன் பாடங்களைப் படிப்பான். அதன் பிறகு அவன் சாப்பிட்டுப் படுக்கப் போவான். அப்போதும் கடவுளை நினைத்துத் தொழுவான். ஆகையால், அவனை எல்லோரும் நல்லவன் என்று மெச்சிப் பேசுவார்கள். நீயும் இப்படியே நடந்தால், நல்லவன் என்று பேர் எடுக்கலாம்.



11.] பதினொன்றாம் பாடம் [கக.

# தும்பியும், பையனும்

(தமக்கையும் தம்பியும் பேசுகிறார்கள்.)

**தமக்கை** — தம்பீ, நீ அங்கே என்ன செய்கிறாய்?

**தம்பி** — நான் ஒரு தும்பியைப் பிடித்து விளையாடுகிறேன், அக்கா.

**தமக்கை** — தம்பீ, தும்பியைப் பிடித்து என்ன விளையாடுகிறாய்?

**தம்பி** — அக்கா, தும்பியின் வாலில் துடைப்பக் குச்சியைக் கோத்து, அதைப் பறக்க விட்டு, வேடிக்கை பார்க்கிறேன்.

**தமக்கை** — ஐயோ, பாவம்! தம்பீ, தும்பியை அப்படிச் செய்யலாமா? அதற்கு நோவாதா?

**தம்பி** — அக்கா, அதற்கு என் நோவும்? நான் ஒரு குச்சியை அதன் வாலில் நுழைக்கும்போது அது தன் இறக்கையை அடித்துக்கொண்டு சந்தோஷப்படுகிறதே; நீ ஏன் பாவம் என்று சொல்கிருய்? அதற்கு நொந்தால் அது என்னிடம் சொல்லாதா?

**தமக்கை** — நீ அப்படியா நினைக்கிருய்? தம்பீ, இங்கே வா; உன் கையில் ஒரு குண்டூசியால் குத்துகிறேன்; அது உனக்குச் சந்தோஷமாக இருக்குமா? பார்ப்போம்.

**தம்பி** — அக்கா, ஐயையோ, ஊசியால் குத்தினல் எனக்கு நோவும், நான் அழுவேன்; உடனே போய் அம்மாவிடம் சொல்லுவேன்.

**தமக்கை** — தம்பீ, நீ அழும்போது, சந்தோஷப்படுகிருய் என்று சொன்னல், உனக்கு எப்படி இருக்கும்? நீதான் அம்மாவிடம் போய்ச் சொல்லுவாய், தும்பி யாரிடத்தில் போய்ச் சொல்லும்?

**தம்பி** — அக்கா, ஆமாம், நீ சொல்வது சரிதான். நான் இனி எந்தப் பூச்சியையும் பிடிக்கமாட்டேன். இதுவரையில் நான் செய்ததும் பாவம் என்று எண்ணி விசனப்படுகிறேன். என்னைப் போல் சில பிள்ளைகள் பூச்சிகளைப் பிடித்து வருத்தி விளையாடுகிருர்கள். இனி, நான் அவர்களைப் பார்த்தால் அவர்களுக்கும் இதைச் சொல்லிக் கண்டிக்கிறேன்.

**தமக்கை** — தம்பீ, அப்படியே செய்; அதுதான் நல்ல குணம்.



12.] பன்னிரண்டாம் பாடம் [கஉ

## மரம்

1. இந்த மரத்தை உற்றுப் பார். அதன் அடியில் பூமிக்குள் ஓடி இருப்பது வேர். வேர், பூமிக்குள் பல பக்கங்களிலும் பரவி இருக்கிறது.

2. வேருக்கு மேலே இருக்கும் பாகத்திற்கு அடிமரம் என்று பெயர். அடிமரம் நன்றாய்ப் பருத்து இருக்கும். அது கிளையைத் தாங்கும்படி மிகவும் உறுதியாக இருக்கிறது. செடி முளைக்கும்போதே அடிமரமும் உண்டாகிறது.

3. அடிமரத்திற்கு மேலே கிளைகள் வளர்ந்து இருக்கின்றன. கிளைகளை மரத்திற்குக் கைகள் என்று சொல்லலாம். கிளைகள், மேல் நோக்கி வளரும் வேர்களைப்போல் இருக்கின்றன. கிளைகள் பருத்து இருக்கும்; வேர்கள் சிறுத்து இருக்கும். கிளைகளில் இலைகள் உண்டு; வேர்களில் இலைகள் இல்லை. பெரிய கிளைகளிலிருந்து சிறு கிளைகளும், மிலாறுகளும் பிரிகின்றன.

4. மிலாறுகளில் இலைகள் நிறைந்து இருக்கின்றன. சில மரங்களில் இலைகள் இணை இணையாய் இருக்கும். இதைப் புளிய மரத்தில் பார்க்கலாம். சில மரங்களுக்கு இலை தனித்தனியாக இருக்கும். இதை ஆல மரத்தில் காணலாம். இலை, மரத்திற்கு விரலைப்போல் உதவுகின்றது. நாம் விரலினால் உணவை எடுத்து உண்பதுபோல மரம் தன் வேரினாலும் இலையினாலும் ஆகாரத்தை அடைகின்றது.

5. ஓர் இலையை எடுத்து உற்றுப் பார். மேற்புறம் வழுவழுப்பாயும், அடிப்புறம் சொரசொரப்பாயும் இருக்கும். இலையில் உள்ள நரம்புகளில், நடுவிலுள்ள நீண்ட நரம்பு இலையை நீட்டிப்பிடிக்கிறது; பக்கத்தில் உள்ள நரம்புகள் இலை அகன்று இருக்கும்படி செய்கின்றன.

6. மரத்திற்குத் தக்க வயது வரும்போது பூ எடுக்கும்; பூத்தபின் காய்க்கும்; காய் முற்றிப் பழுக்கும். பழத்தில் விதைகள் உண்டு. விதையே மரம் முளைப்பதற்கு ஆதாரம்.



13.] பதின்மூன்றும் பாடம் [கரு.

# எறும்பு

1. எறும்பு மிகவும் சிறிய ஜந்து. அது பூமியில் வளை தோண்டிக்கொண்டு, கூட்டம் கூட்டமாய் வசிக்கும். எறும்புகள் சாரை சாரையாய் ஊர்ந்து போகும். அவைகள் எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருக்கும்.

2. ஓர் எறும்பு எங்கேயாவது தீனி இருக்கக் கண்டால், அது போய், தன் கூட்டங்களை எல்லாம் அங்கே அழைத்துக்கொண்டு வரும்.

3. எறும்புகளில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை முதலிய பல நிறமானவை உண்டு. வெள்ளை எறும்பைச் சேல் என்று சொல்லுகிறோம். அது மரம், புஸ்தகம் முதலிய வஸ்துக்களை அரித்துவிடும். சில எறும்புகளுக்குச் இறக்கையும் உண்டு.

4. ஓர் எறும்பு ஏதாவது ஓர் இரையை இழுத்துக் கொண்டு வரும்போது மற்ற எறும்புகளும் அதற்கு உதவி செய்யும்; அப்படிச் செய்வதைப் படத்தில் பார். எறும்பின்மேல் நம்முடைய கை கால்கள் பட்டால், அது நம்மைக் கடிக்கும். அதற்கு ஒரு கதை சொல்லுகிறேன், கேளுங்கள் :

5. ஒரு காக்கை இரண்டு முட்டைகளை ஓர் இடத்தில் இட்டது. அந்த முட்டைகளைப் புல் மறைத்துக்கொண்டது. அப்பொழுது காக்கை புல்லைப் பார்த்துக் கேட்கிறது :

**காக்கை** — புல்லே, நீ ஏன் என் முட்டையை மறைத்துக் கொண்டாய் ?

**புல்** — மாடு வந்து என்னை மேயவில்லை.

**காக்கை** — மாடே, நீ ஏன் புல்லை மேயவில்லை ?

**மாடு** — பையன் வந்து என்னை ஓட்டவில்லை.

**காக்கை** — பையா, நீ ஏன் மாட்டை ஓட்டவில்லை?

**பையன்** — என் தாயார் எனக்குக் கஞ்சி வார்க்கவில்லை.

**காக்கை** — அம்மா, நீ ஏன் கஞ்சி வார்க்கவில்லை?

**அம்மாள்** — இங்கே என் பிள்ளை அழுகிறது.

**காக்கை** — பிள்ளாய், நீ ஏன் அழுகிறாய் ?

**பிள்ளை** — எறும்பு என்னைக் கடித்தது.

**காக்கை** — எறும்பே, நீ ஏன் அந்தப் பிள்ளையைக் கடித்தாய் ?

**எறும்பு** — என் புற்றிலே கையை வைத்தால், நான் கடிக்காமல் சும்மா இருப்பேனா ?

18199

14.] பதினான்காம் பாடம் [கச.

# தபால்காரன்

**ராமன்** — மாமா, இதோ தபால்காரன் வந்தான்; நமக்கு ஒரு கடிதம் வந்தது.

**மாமன்** — ஆமாம், இது பெங்களூரி லிருந்து வந்திருக்கிறது.



**ராமன்**—மாமா, நீங்கள் இன்னும் இதைப் பிரிக்க இல்லையே, இது பெங்களூரிலிருந்து வந்தது என்று உமக்கு எப்படித் தெரியும் ?

**மாமன்** — தெரியாமல் என்ன, இதோ பார் தபால் முத்திரை, 'பெங்களூர்' என்று இங்கிலீஷில் அடித்திருக்கிறது:

**ராமன்** — சரிதான், இதைப் பெங்களூரில் எப்பொழுது போட்டு இருப்பார்கள் ?

**மாமன்** — நேற்று மாலை போட்டு இருப்பார்கள்.

**ராமன்** — அதுவும் முத்திரையில் இருக்கிறதோ ?

**மாமன்** — ஆமாம், கடிதம் தபாலில் போட்ட தேதியும் மணியும் முத்திரையில் இருக்கும்

**ராமன்** — சரிதான், இதோ இன்னொரு முத்திரை இருக்கிறதே, அது என்ன ?

**மாமன்** — அது இந்த ஊரின் தபால் ஆபீஸில் போட்ட முத்திரை ; அதிலும் தேதியும் மணி-யும் இருப்பதைப் பார்.

**ராமன்** — கடிதத்தை இந்தத் தபால்காரன் எப்படி நமக்குக் கொண்டு வருகிறான் ? மாமா !

**மாமன்** — கடிதத்தை எழுதி, தபால் பெட்டியில் போட வேண்டும். பிறகு, பெட்டியில் சேர்ந்த கடிதங்களை எல்லாம் தபால்காரர் எடுத்து முத்திரை அடித்து, ஒரு பையில் போட்டுக் கட்டி, ரெயிலுக்கு அனுப்புவார்கள். ரெயிலில் ஒரு தபால் உத்தியோகஸ்தன் இருப்பான். அவன் அந்தப் பையை அவிழ்த்து, அந்த அந்த ஊருக்குப் போகவேண்டிய கடிதங்களைப் பிரித்து, வேறு பையில் போட்டுக் கட்டி, ஊர் ஊராகக் கொடுத்துக் கொண்டே போவான். அந்த அந்த ஊர் தபால்காரர் அதை வாங்கி அவிழ்த்து அவரவர்களுக்குக் கொடுப்பார்கள்.

**ராமன்** — கடிதத்தின் மேல் மூலையில் ஒரு படம் ஒட்டி யிருக்கிறதே, அது என்ன ?

**மாமன்** — அது நமது ராஜாவின் தலைப் படம். நாம் எழுதும் கடிதத்தைக் கொண்டுபோவ-தற்குக் கூலி கொடுக்கவேண்டும் அல்லவா ? அந்தக் கூலிக்குப் பதிலாகத் தலை வாங்கி, கடிதத்தின் மேலே ஒட்டவேண்டும்.



15.] பதினைந்தாம் பாடம் [கரு.

# முனியனும், இராமனும்

**முனியன்** — இராமா, நீ எங்கே போகிறாய்?

**இராமன்** — நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

**முனியன்** — நானும் பள்ளிக்கூடந்தான் வரு-கிறேன். இன்றைக்குப் பள்ளிக்கூடம் வர எனக்கு இஷ்டம் இல்லை. விளையாட அதிக இஷ்டம் உண்டாகிறது. இராமா, நீயும் என்-னோடு நின்றுவிடுகிறாயா?

**இராமன்** — நான் நிற்கமாட்டேன். நின்றுவிட்டால் நாளைக்கு நம்மை உபாத்தியாயர் அடிப்பார். மேலும், நாள்தோறும் நாம் பள்ளிக்கூடத்தில் விளையாடுகிறோமே, இன்று விளையாட இங்கே ஏன் நின்றுவிட வேண்டும்?

**முனியன்** — இராமா, நாம் இன்று நின்றுவிட்டால், நாம் பள்ளிக்கூடம் வர வில்லை என்று உபாத்தியாயருக்கு எப்படித் தெரியும்?

**இராமன்** — நாம் இன்று நின்றுவிட்டால் உபாத்தியாயருக்குத் தெரியாமல் போகுமா? நித்தம் இரண்டு வேளையும் ஒரு புஸ்தகத்தைப் பார்த்து, நம்முடைய பெயர்களைக் கூப்பிடுகிறாரே, தெரியாதா? அப்படியே இன்றும் கூப்பிடுவார். அப்போது நாம் அங்கு இல்லாவிட்டால், வரவில்லை என்று குறித்து வைத்துக்கொள்ளுவார். நாளைக்கு நாம் போனதும் நம்மைக் கூப்பிட்டு விசாரித்து, தண்டிப்பார். அதுவும் அல்லாமல், பள்ளிக்கூடம் போகும் வழியில் விளையாடக் கூடாது' என்று என் தகப்பனார் எனக்குத் திட்டம் செய்திருக்கிறார்.

**முனியன்** — இராமா, நீ ஏன் இப்படிச் சொல்லுகிறாய்? நாம் நாளைக்குப் போய், 'எங்கள் தகப்பனார் எங்களை நிறுத்திவிட்டார்' என்று சொன்னால் என்ன?

**இராமன்** — அப்படியானால், நமது தகப்பனாரிடம் கடிதம் வாங்கிக்கொண்டு போக வேண்டும். ஆகையால், நான் நிற்கமாட்டேன்.

# அவரைக் கொட்டை

1. நான் ஓர் அவரைக் கொட்டை; நான் சொல்லுவதைக் கேட்டால் அநேக விஷயங்கள் உனக்கு விளங்கும். என் உடல் முழுதும் தோல் மூடிக்கொண்டு இருக்கிறது. கொஞ்ச நேரம் நீ என்னைத் தண்ணீரில் ஊறப்போடு. பிறகு எடுத்து என் தோலை உரி. தோல் முழுதும் சுலபமாக நீங்கிவிடும். இதோ பார், மேல் மூலையில் சிறிய முளை இருக்கிறது. அது வளர்ந்து பூமிக்குள் செல்லும்.





2. என் உடல் இரண்டு பிரிவாக அமைந்து இருக்கிறது. உள்ளே சிறு செடி காண்கிறது; அது வளர்ந்து செடியாகிறது. நான் செடியாக வளர்வதை நீ பார்க்கவேண்டுமா?. நான் சொல்வதைப்போல் செய்து பார்; என் விஷயம் உனக்கு விளங்கும்.



3. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் முக்கால் பங்கு வாள்தூள் போடு. அதில் கொஞ்சம் ஜலம் விடு. பிறகு என்னை அதில் புதைத்து வை. நான் எப்படி ஆகிறேன், பார்? தினம் கவனித்துக்கொண்டே இரு. இப்போது நான் நீரில் ஊறிப் பருத்திருக்கிறேன். வாய்ப் புறத்தில் என் தோலைக் கிழித்துக்கொண்டு, வேர் வெளியே வருகிறது.



4. இதோ பார், என் உடலிலிருந்து வேரும் முளையும் வெளிப்பட்டு இருக்கின்றன. செடிக்கு ஆகாரம் சம்பாதிக்க, வேர் பல பக்கங்களில் போகின்றது. கொஞ்ச நாள் வரையில் விதையிலுள்ள உணவே செடிக்கு ஆகாரமாக உதவுகிறது.



5. விதையின் நடுவில் முளை கிளம்பி வளர்ந்து, இலைகள் கிளைத்து இருக்கின்றன. வேர் பருத்து, பூமிக்குள் நேராகப் போய் இருக்கிறது.



அதனால் செடி நிலைத்து நிற்கிறது. விதையில் இருந்த ஆகாரம் எல்லாம் குறைந்து விட்டது. இப்போது அதில் ஒன்றும் இல்லை ; விதையின் பை சுருங்கி விட்டது. இனிமேல் அது வாடி விழுந்துவிடும். பூமியிலுள்ள உணவை வேர் எடுத்துச் செடிக்கு ஊட்டும். அதனால், செடி இனி நன்றாய் வளரும். இதுதான் என் சரித்திரம் என்று அவரைக் கொட்டை பையனுக்குச் சொல்லிற்று.

17.] பதினேழாம் பாடம் [கஎ.

# உருவங்கள்

1. இந்த உருவத்தைப் பார். இது என்ன உருவம்? இது ஒரு சதுரம். இது ஒரு சதுரக் கல்லைப்போல் இருக்கிறது. இதற்கு நான்கு பக்கங்கள் இருக்கின்றன. நான்கு பக்கங்களும் ஒரே அளவாய் இருக்கின்றன. மூலைகளைப் பார்; நான்கு மூலைகளும் சரியான மூலைகள். இந்த உருவத்திற்குச் **சம சதுரம்** என்று பெயர். சம சதுரமான பொருள்களில் ஏதேனும் ஒன்றின் பெயரைச் சொல்லு.



2. இந்தச் சதுரத்தைப் பார். இதற்கும் நான்கு பக்கங்கள் இருக்கின்றன; நான்கு மூலைகள் இருக்கின்றன. மூலைகள் எல்லாம் சரியாகவே இருக்கின்றன. ஆனால் பக்கங்கள் ஒரே அளவாக இருக்கவில்லை. எதிர் எதிரான பக்கங்கள் ஒரே அளவாய் இருக்கின்றன. இப்படி இருக்கும் உருவத்திற்கு **நீண்ட சதுரம்** என்று பெயர். வாசக்கால், ஜன்னல் முதலியவை நீண்ட சதுரம் அல்லவா?





3. இதற்கு மூன்று பக்கங்களும், மூன்று மூலைகளும் இருக்கின்றன. பக்கங்களும் மூலைகளும்

சரியாக இருக்கின்றன. இது நம்முடைய வீட்டுச் சுவரில் உள்ள மாடம் போல் இருக்கிறது. இதற்கு **முக்கோணம்** என்று பெயர்.




4. இதற்குப் பக்கமும் இல்லை, மூலையும் இல்லை. முழுதும் சுற்றி வளைந்து இருக்கிறது. இதைப் பார்த்தால் சக்கரம்போல் இருக்கிறது. இதற்கு **வட்டம்** என்று பெயர். சூரியன் வட்டமாய் இருக்கிறது. முழு நிலாவும் வட்டமான வடிவம் உள்ளது.




5. இதைப் பார்த்தால், எப்படி இருக்கிறது? இது ஏறக்குறைய முட்டையைப் போல் இருக்கிறது. இதற்கு **முட்டை வடிவம்** என்று பெயர். மாம்பழம், பலாப்பழம் முதலியவை சற்று ஏறக்குறைய இந்த வடிவமாய் இருக்கின்றன.

**18.**] பதினேட்டாம் பாடம் [கஅ.

# எறும்பு

1. சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெ றும்பே
உன்னைப் போல நானுமே
உழைத் திடவே வேணுமே.

2. பலர் ஒன்றாய்க் கூடுவீர்
பண்டங் களைத் தேடுவீர்
புல மாக நாடுவீர்
புற்றில் கொண்டு போடுவீர்.

3. ஒன்றின் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய்
நன்றாய் உம்மைக் கண்டு
நடந்தால் நலம் உண்டு.

4. முட்டை கொண்டு மேலே
திட்டை ஏறி னாலே
மட்டி லாத மழையும்
திட்ட மாகப் பொழியும்.

5. சோம்ப லான பிள்ளையே
சுறு சுறுப்பே இல்லையே
தேம்பா மல் நீ வாராய்
சிற்றெ றும்பைப் பாராய்.

# வா ழை ம ர ம்

காம்போதி - ஆதிதாளம்

1. வாழை மரம் செழிப்பாக
வளர்ந்தி ருப்பதைப் பார்
கீழே கன்றுகள் அடர்த்தியாகக்
கிளைத்தி ருப்பதைப் பார்.

2. ஆழ மாகப் பள்ளம் வெட்டி
அதிலொரு கன்றைத்
தாழ வைத்துத் தினந்தோறும்
தண்ணீர் பாய்ச்சினல்,

3. குருத்து விட்டு இலைகள் விட்டுக்
கொண்டே வந்துபின்
திருத்தமாய் ஐந்தாறு மாதம்
சிறிய இலைவிடும்.

4. கண்ணுடி இலை என்றதைக்
காட்டிச் சொல்லுவார்
எண்ணும் அதனேடே குலை
இறங்கித் தள்ளிவிடும்.

5. முன்னே பூவும் பின்னே காயும்
முளைத்துத் தோன்றுமே
பின்னிரண்டு மாதத்துக்குள்
பிஞ்சுகள் முற்றுமே.

6. பட்டைகள் ஒன்றின்மேல் ஒன்ருயப்
படிந்தி ருக்குமே
ஒட்டியுள்ளே தண்டிருக்கும்
உரித்தால் தெரியுமே.

7. காயின் மேல்தோல் பச்சை. பழுத்தால்
மஞ்சள் நிறங்காணும்
காய்பூ தண்டும் கறிக்காகும்
இலையில் சாப்பிடலாம்.

8. காய் துவர்க்கும் பழந் தித்திக்கும்
கன்றல் லாமலே
ஏயுங் கிளைகள் ஒன்றுமில்லை
இதற்கு விதையில்லை.

9. சிப்புகள் ஒன்றின்மே லொன்ருய்
சேர்ந்திடும் குலையில்
சிப்பில் பத்துப் பதினைந்து
தேறுங் காயுண்டு.

10. கலியாணப் பந்தலில் மரத்தைக்
கட்டலாம் நாரில்
நலமாகப் புஷ்பம் கட்டலாம்
நாரு வுபயோகம்.

11. காய் முற்றினுல் மரத்தை வெட்டக்
கண்டும் அதன் கீழ்
வாய்ந்த கன்றும் குலைதள்ளும்
மண்ணில் அதனலே,

12. தாம் கெட்டாலும் பெரியோர்கள்
தருமம் செய்யப் பின்
வாங்கமாட்டார் என்னும் நீதி
வழங்கும் இதனலே.

# உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.
6. நஞ்சுடனே ஒரு நாளும்
பழக வேண்டாம்.
7. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.
8. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.
9. தனந்தேடி உண்ணுமல்
புதைக்க வேண்டாம்.
10. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

11. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

12. கற்றவரை ஒரு நாளும்
பழிக்க வேண்டாம்.

13. கொலைகளவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

14. கோயிலில்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்.

15. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

16. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

17. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

18. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

19. செய்தநன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

20. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

18197

Printed at the 'Caxton Press,' Madras — 1924.

## ஸி. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ்

### மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| முதல் வகுப்பு ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் வகுப்பு ... ... ... | 0 | 3 | 6 |
| நான்காம் வகுப்பு ... ... ... | 0 | 4 | 0 |
| ஐந்தாம் வகுப்பு ... ... ... | 0 | 6 | 0 |

### சோற்றேடர் ஆக்கம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |

### இலக்கணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சிற்றிலக்கண வினவிடை—I - 4 - ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| சிற்றிலக்கணம்—II - முதல் பாரத்திற்கு ... | 0 | 4 | 6 |
| சிற்றிலக்கணம்—III - இரண்டாம் பாரத்திற்கு | 0 | 6 | 0 |
| சிற்றிலக்கணம்—IV - மூன்றும் பாரத்திற்கு | 0 | 8 | 0 |

### மூன்றும் வகுப்புப் பூகோளங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னபட்டணம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| செங்கற்பட்டு ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |
| தென் ஆர்காடு ஜில்லா ... ... | 0 | 6 | 0 |
| கோயமுத்தூர் ஜில்லா ... ... | 0 | 6 | 0 |
| தஞ்சாவூர் ஜில்லா ... ... ... | 0 | 5 | 0 |
| மதுரை ஜில்லா ... ... ... | 0 | 5 | 0 |
| இராமநாதபுரம் ஜில்லா . ... | 0 | 5 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா ... ... | 0 | 6 | 0 |
| சேலம் ஜில்லா ... ... . | 0 | 6 | 0 |
| வட ஆர்காடு ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |

Caxton Press, Madras